

கள்ளக்குறிச்சி மாவட்டம், கல்வராயன்மலை வட்டம், தொரடிப்பட்டு கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் அமைக்கப்பட்டிருந்த அரசின் பல்வேறு துறைகளின் கண்காட்சி அரங்குகளை மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன் ஆகியோர் 12.02.2025 புதன்கிழமை அன்று நேரில் பார்வையிட்டு 482 பயனாளிகளுக்கு ரூ.44 லட்சத்தில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள், இம்முகாமில் மாவட்ட வருவாய் அலுவலர் ரா.ஜீவா, வருவாய் கோட்டாட்சியர் எஸ்.லூர்துசாமி, வேளாண் இணை இயக்குநர் சத்தியமூர்த்தி, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) குப்புசாமி, கல்வராயன் மலை ஒன்றியக் குழுத் தலைவர் சி.சந்திரன், ஒன்றியக் குழுத் துணைத் தலைவர் ஜா.பாச்சாபி, வட்டாட்சியர் கு.சோமசுந்தரம், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் ஊராட்சி ஒன்றியம், பெலவர்த்தி ஊராட்சி, வள்ளுவர்புரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில், நடைபெற்ற "மக்களுடன் முதல்வர்" மூன்றாம் கட்ட திட்ட முகாமில், பெறப்பட்ட மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நலத்திட்ட உதவிகளை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி.கணேசன் வழங்கினார். உடன், பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன், மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### மாநில அரசுகளுக்குக் கூடுதல் அதிகாரம்!

# பேரிடர் மேலாண்மை சட்டத்திருத்த தனிநபர் மசோதா!

## மாநிலங்களவையில் – பி.வில்சன் தாக்கல் செய்தார்!

புதுடெல்லி, பிப்.14-

2005 ஆம் ஆண்டின் பேரிடர் மேலாண்மை சட்டத்தைத் திருத்தி, தேசியப் பேரிடர்களை எதிர்கொள்ளுவதற்காக மாநில அரசுகளுக்கு கூடுதல் அதிகாரங்களைத் தரும்வகையில் தனிநபர் மசோதாவை மாநிலங்களவையில் பி.வில்சன் 11.2.2025 அன்று தாக்கல் செய்தார்.

அதில் கூறப்பட்டிருப்பதாவது:

தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் என்ற பெயரை மாற்றி தேசிய பேரிடர் மேலாண்மை கவுன்சில் எனும் புதிய பெயரைச் சூட்டக் கோரும் இம்மசோதா மாநில பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அல்லது மாநில அரசால் பரிந்துரைக்கப்படும் அமைச்சரை தேசிய பேரிடர் மேலாண்மை கவுன்சிலின் உறுப்பினராகச் சேர்க்கவேண்டும் என்று கோருகிறது. ஒன்றிய அரசைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு இந்தியப் பிரதமர் அல்லது பிரதமரால் பரிந்துரைக்கப்படும் ஒன்றிய அமைச்சர் இக்கவுன்சிலின் தலைவராக இருப்பார். ஒன்றிய அரசின் கேபினட் செயலர், தேசியபேரிடர் மேலாண்மை கவுன்சிலின் செயலாளராக இருப்பார், ஆனால் அவருக்கு வாக்குச் செலுத்தும் உரிமை இருக்காது. தேசிய பேரிடர் மேலாண்மை கவுன்சிலால் எடுக்கப்படும் அனைத்து முடிவுகளும் அவையில் உள்ள உறுப்பினர்கள் அளிக்கும் பெரும்பான்மை வாக்குகளால் தீர்மானிக்கப்படும்.

தேசியப் பேரிடர் நிவாரண நிதி கோரும் மாநில அரசுகளின் நிவாரணம், மறுவாழ்வு, தணிப்பு, மறுசீரமைப்பு நிதிக் கோரிக்கை கோரப்பட்ட நாளிலிருந்து முப்பது நாட்களுக்குள் பரிசீலிக்கப்படும்.



பேரிடர்த் தன்மை, அதன் தாக்கத்தின் அளவு, பேரிடர் தாக்கத்தை எதிர்கொள்ள மாநிலம் அல்லது யூனியன் பிரதேசத்தின் நிதி நிலை, பேரிடரால் பாக்கப்பட்ட மக்களை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கும் மீள்குடியேற்றம் செய்வதற்கும் நிதி தேவை, பிற புறநிலைக் காரணங்கள் ஆகிய புறநிலை அளவுகோல்களை அடிப்படையாகக் கொண்டு மாநில அரசால் கோரும் நிவாரண நிதிவழங்கும் முடிவுஎடுக்கப்படும்.

**மசோதாவிற்கான காரணங்களும் நோக்கங்களும்**

2005 ஆம் ஆண்டின் பேரிடர் மேலாண்மைச் சட்டத்தைத் திருத்தி, பிரதமர், பிரதமரால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களை மட்டுமே உள்ளடக்கிய தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தை (NDMA) மாற்றி, அனைத்து மாநிலங்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய கொண்ட பரந்த அளவிலான தேசிய பேரிடர் மேலாண்மை கவுன்சிலை (NDMC) உருவாக்குவதே இந்த மசோதாவின் முக்கிய நோக்கம்.

பேரிடர் ஏற்படும் போது மாநிலங்களுக்கு உதவும் வகையில் ஒன்றிய அரசைத் தயார்படுத்துவதற்காக தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் (NDMA) உருவாக்கப்பட்டது. இந்தியக் குடிமக்களின் உயிர், உடைமைகளைப் பாதுகாப்பதில் ஒன்றிய அரசு முதன்மைப் பங்கு வகிக்க வேண்டும். இயற்கை பேரிடர்களால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு ஒன்றிய அரசு உதவி செய்ய வேண்டும். தேசியப் பேரிடர் மேலாண்மைச் சட்ட (2005) விதிகளின் கீழ் இயற்கைப் பேரிடர்களில் மீண்டெழும் வகையில் மாநிலங்களுக்கு நிவாரண நிதி வழங்கி உதவுவது ஒன்றிய அரசின் சட்டப்பூர்வக் கடமை. ஒன்றிய அரசு பாரபட்சமின்றி, அரசியல் சார்பு இல்லாமல் தன் கடமைகளை நிறைவேற்ற வேண்டும். எனவே, தேசியப் பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் கீழ் முடிவெடுக்கும் உயர்மட்டக் குழு, மாநிலப் பிரதிநிதிகளையும் உள்ளடக்கியதாக இருப்பது மிகவும் அவசியமாகும். இது கூட்டுறவுக் கூட்டாட்சியை உறுதிப்படுத்தும் அரசியலமைப்பு உறுதிமொழியை வலுப்படுத்தும். அனைத்து மாநிலங்களும் தேசிய பேரிடர் மேலாண்மை கவுன்சிலின் (NDMC) விவாதங்களில் பங்கேற்கலாம். தேசியப் பேரிடர் நிவாரண நிதி வழங்கும் செயல்முறை வெளிப்படையானதாக மாறும். தற்போதைய தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் அனைத்துப் பேரிடர்களையும் ஒரே மாதிரியான அணுகுமுறையுடன் கையாள்கிறது. ஆனால் புதிதாக அமைக்கப்படவிருக்கும் தேசிய பேரிடர் மேலாண்மை கவுன்சில் மாநிலங்களுடன் இணைந்து ஆலோசித்து, ஒவ்வொரு மாநிலத்தின் தேவைகளுக்கு ஏற்ப முடிவுகள் எடுக்கப்படும்.

தேசிய பேரிடர் மேலாண்மைக்கு எதிர்கொள்ள ஒதுக்கப்பட்ட நிதியை பாரபட்சமற்ற முறையில் தேவைப்படும் மாநிலங்களுக்கு ஒதுக்கீடு செய்வதற்கும், நிவாரண நிதியை வெளிப்படையான முறையில் பயன்படுத்துவதற்கும் வெளிப்படையான, சமமான செயல்முறை உருவாக்கப்படுவதை இந்தத் திருத்தம் நோக்கமாகக் கொண்டுள்ளது, இதன் மூலம் பேரிடர்களால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள மாநிலங்கள் நிதியில்லாமல் அல்லது புறக்கணிக்கப்படாமல் இருப்பது உறுதி செய்யப்படுகிறது. பேரிடர் தாக்கத்தின் தீவிரம், பாதிக்கப்பட்ட மாநிலங்களின் அவசரத் தேவைகளின் அடிப்படையில் நிதியுதவி வழங்கப்படும் அல்லது அதற்கேற்ற வகையில் முன்னுரிமை வழங்கப்படும்.

இம்மசோதா நிறைவேற்றப்பட்டால், அதன்மூலம் செயலுக்கு வரும் புதிய திருத்தம், தேசியப் பேரிடர் நிதியை சமஅளவில் பங்கிடுவதை உறுதி செய்யும். அதிகத் தேவைகளைக் கொண்ட மாநிலங்களுக்கான நிதி உதவி வழங்குவதை முதன்மைப்படுத்தும் இந்த அணுகுமுறை, பேரிடர்களை எதிர்கொள்ளும் தயார்நிலையை மேம்படுத்தும். பேரிடரிலிருந்து விரைவில் மீண்டுவருவதை உறுதிசெய்யும்.

இவ்வாறு பி.வில்சன் அறிமுகப்படுத்தியுள்ள மசோதாவில் கூறப்பட்டுள்ளது.

பி.வில்சன் அறிமுகப்படுத்தியுள்ள இம்மசோதா நிறைவேற்றப்பட்டால், பேரிடர்களின் போது மாநிலங்களின் நிவாரண நிதிக் கோரிக்கைகள் புறக்கணிக்கப்படுவது தடுத்து நிறுத்தப்படும்.

### கடன் மதிப்பீட்டு நிறுவன அமைப்பின் விவரங்கள் என்ன?

# பொது மக்களைப் பாதுகாக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

## மக்களவையில் – அருண் நேரு கேள்வி!

புதுடெல்லி, பிப். 14-

மக்களவையில் பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் அருண் நேரு, பணியாளர் மற்றும் பொருளாதார இணை அமைச்சர் பங்கஜ் சௌதரியிடம் தற்போது கடன் மதிப்பீட்டு நிறுவனங்களுக்கான மேற்பார்வை அமைப்பின் விவரங்கள் என்ன?, பயன்பாட்டாளர்கள் தங்கள் அறிக்கைகளில் பிழைகளை திருத்த ஒரு நியாயமான வாய்ப்பு வழங்கப்படுகிறதா, பொதுமக்களை பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருகிறதா ஆகிய கேள்விகளை முன் வைத்தார்,

இதற்கு அமைச்சர் பங்கஜ் சௌதரி அளித்த பதில் வருமாறு:

கடன் தகவல் நிறு வனங்கள் 2005ஆம் ஆண்டின் கடன் தகவல் நிறுவனங்களுக்கான (விதிகள்) சட்டம் (CICRA), அதன் கீழ் வெளியிடப்பட்ட விதிகள் மற்றும் இந்திய ரிசர்வ் வங்கி (RBI) வெளியிடும் வழிகாட்டுதல்களின் அடிப்படையில் நிர்வகிக்கப்படுகின்றன. அந்த சட்டத்தின் கீழ் ரிசர்வ் வங்கி அந்த நிறுவனங்களின் செயல்பாடுகளை ஒழுங்குபடுத்தும் பணியை வழங்குகிறது.

RBI இதனுடன் தொடர்புடைய கொள்கைகளை உருவாக்கும், வழிகாட்டுதல்களை வெளியிடும், கணக்குப் புத்தகங்களை ஆய்வு செய்யும் மற்றும் விதிகள் பின்பற்றப்படாமல் உள்ள நிறுவனங்களுக்கு அபராதம் விதிக்கச்



செய்யும் அதிகாரம் பெற்றுள்ளது.

சட்டத்தில் குறிப்பிட்டுள்ள படி, கடன் பெறுநர் அல்லது கிளையண்ட் தமது கடன் தகவலை திருத்த/புதுப்பிக்க கோரிக்கையை செய்யலாம், மற்றும் அந்த நிறுவனங்கள் அல்லது கடன் நிறுவனம் (CI) அந்த கோரிக்கையைப் பெற 30 நாட்களுக்குள் சரியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

மேலும், RBI 2021ல் வெளியிட்ட "ரிசர்வ் வங்கி ஒருங்கிணைந்த உபரிகர் திட்டம்" (RBIOS) என்ற புதிய grievance redressal அமைப்பினை CIC களுக்குச் செய்யும் நடவடிக்கைகளுக்குப் பரிந்துரைத்துள்ளது. இது, CIC அல்லது CI இன் தவறான செயல்களில் வாடிக்கையாளர்கள் பாதிக்கப்பட்டால், அவர்கள் புகார் மனு கொடுக்கலாம்.

மேலும், வாடிக்கையாளர் சேவையை மேம்படுத்த பல நடவடிக்கைகள் எடுத்துள்ளது. இதன் அடிப்படையில், அந்த நிறுவனங்கள் சில வழிகாட்டுதல்களை பின்பற்ற வேண்டும்:

அதன் படி அந்த நிறுவனங்கள் கடன் மதிப்பெண் உடன் முழு கடன் அறிக்கையை இலவசமாக மின்னணு வடிவில் வழங்க வேண்டும்.

மேலும் தங்களது grievance redressal அமைப்பை வலுப்படுத்த, வாடிக்கையாளர் புகார்களை மறுக்க முன்பே பரிசீலிக்க வேண்டும்.

30 நாட்களுக்கு முன்பு தீர்க்கப்படாத புகார்களுக்கு 100 ரூபாய் காலாண்டு இழப்பீடு வழங்க வேண்டும்.

அந்த நிறுவனங்கள் வாடிக்கையாளர் புகார்களின் அடிப்படை காரணத்தை அடிப்படையில் ஆறுமாதம் ஒருமுறை பகிர்ந்து சரிபார்க்க வேண்டும் என அமைச்சர் கூறினார்.

### திருப்பத்தூர் – திருவண்ணாமலை மாவட்டங்களில் தென்னை மரங்கள் பாதிப்பு

# 5,800 விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு வழங்கிடுவீர்!

## மக்களவையில் சி.என்.அண்ணாதுரை வலியுறுத்தல்!

புதுடெல்லி, பிப். 14-

திருப்பத்தூர் – திருவண்ணாமலை மாவட்டங்களில் கருப்புத் தலை கம்பளிப் பூச்சுகளால் தென்னை மரங்கள் தாக்கப்பட்டு 10,600 ஹெக்டர் நிலம் பாதிக்கப்பட்டுள்ளது எனவே அவர்களுக்கு உரிய பூச்சிக் கொல்லி மருந்துகளும் நஷ்ட ஈடும் வழங்க வேண்டும் என்று மக்களவையில் திருவண்ணாமலை தொகுதி கழக உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை வலியுறுத்தினார்.



அது வருமாறு

தென்னை விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு, தென்னை மரங்களை தாக்கும் கருப்புத் தலை கம்பளிப் பூச்சிகளால் திருவண்ணாமலை மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் உள்ள 10,600 ஹெக்டர் நிலம் மற்றும் 5,800 விவசாய குடும்பங்கள் பாதிப்பு. ஒன்றிய அரசு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு தேவையான பூச்சிக் கொல்லி மருந்துகள் மற்றும் நஷ்ட ஈடு தர வேண்டும்.

இவ்வாறு நாடாளுமன்றத்தில் சி.என்.அண்ணாதுரை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### தமிழ்நாட்டு மக்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள்!

# நீதியை அநீதியாக மடைமாற்றுகிற அநீதி பட்ஜெட் இது!

## மக்களவையில் – தமிழச்சி தங்கபாண்டியன் கடும் கண்டனம்!

புதுடெல்லி, பிப்.14-

"நீதியை அநீதியாக மடைமாற்றும் அநீதி பட்ஜெட் இது" என்று நாடாளுமன்ற மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் கடும் விமர்சனம் செய்தார்.

தென்சென்னை தொகுதி மக்களவை உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், மக்களவையில் நடைபெற்ற பட்ஜெட் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு தமிழில் பேசினார். அவை அதிர, அவர் பேசியதாவது:

ஒன்றிய நிதி அமைச்சர் பட்ஜெட் தாக்கல் செய்யும்போது தனது உரையில், தெலுங்கு கவிஞர் குர்ஜாடா அப்பாராவின் தேசம் என்பது மண் அல்ல, மக்கள் என்ற முழக்கத்தோடு தொடங்கினார். அவருக்கு நானும், திராவிடம் என்பது மண், இடம் மட்டுமல்ல. கால்டுவெல் அவர்களால் உலகில் மிக நிறைவான அறிவும், மூடநம்பிக்கை அற்றவர்கள் திராவிட மக்கள் என்று சொல்லப்படுகிற பெருமை மிகுந்த இனம், அந்த இனத்திலே ஒருவராக பெரும்பான்மையாக இருக்கின்ற தமிழ்நாட்டு மக்கள் இந்த பட்ஜெட்டிலே புறக்கணிக்கப்பட்டு இருக்கிறார்கள் எனும் வேதனையோடு, யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம் என்று பாரதி புகழுரைத்த தமிழில் உரையாற்றுகிறேன்.

இது நிதி அமைச்சருக்கு இது 8வது பட்ஜெட். ஆனால் வறியவருக்கு, விவசாயிகளுக்கு, மாற்றுப்பாலினத்தவருக்கு, ஒடுக்கப்பட்டவர்களுக்கு, சிறுபான்மையினருக்கு மிக குறிப்பாக தமிழ்நாட்டு மக்களுக்கு எட்டாக்கனி பட்ஜெட் "Water Water Every Where Not a Drop to Drink" கோல்ரிட்ஜின் புகழ்பெற்ற வரிகள், சுற்றிலும் தண்ணீர் ஆனால் குடிப்பதற்கு ஒரு சொட்டுக்கூட இல்லை.

**பாராமுக பட்ஜெட்!**

"ஆயுதம் செய்வோம், நல்ல காகிதம் செய்வோம்,

ஆலைகள் செய்வோம், கல்விச்சாலைகள் செய்வோம்,

ஓயுதல் செய்யோம், தலை சாயுதல் செய்யோம்" என்று நல்லாட்சி நடத்திக்கொண்டு இருக்கும் எங்கள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எத்தனை கோரிக்கைகளை விடுத்திருப்பார்? ஆனால் சுற்றிலும் தண்ணீர், எங்களுக்கு ஒரு சொட்டு தண்ணீர் இல்லை எனும் அளவுக்கு தங்கள் கூட்டணிக் கட்சிகளுக்கு, பா.ஜ.க ஆளும் மாநிலங்களுக்கு மட்டும் வாரி வாரி அளித்துவிட்டு எங்களுக்கு கையை விரித்து இருப்பதால் இது பாராமுக பட்ஜெட், இது பாரபட்ச பட்ஜெட்.

உலகமெங்கும் பட்ஜெட் எப்படி தாக்கல் செய்யப்படுகிறது என்பதை நினைத்துப் பாருங்கள். கனடாவும், ஜெர்மனியும் தங்களது வரவுசெலவினங்களில் கணிசமான பகுதியை சமூகநல பாதுகாப்புக்கு, குழந்தைகள் நல மேம்பாட்டுக்கு, திறன் மேம்பாட்டுக்கு ஒதுக்குகின்றன. ஆனால், ஒன்றிய அரசோ தொடர்ச்சியாக சமூகநல திட்டங்களுக்கான நிதியை குறைத்துக் கொண்டே வருகிறது. மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதி திட்டம், பி.எம் கிசான் திட்டம் போன்றவற்றை உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். ஆனால், பெருநிறுவனங்களுக்கு மானியத்தை மாறி மாறி வழங்கிவிட்டு, சாமானிய மக்களின் வரிப்பணத்தை பெரு முதலாளிகளுக்கு மடைமாற்றி விடுவதால் இது நீதியை அநீதியாக மடைமாற்றுகிற அநீதி பட்ஜெட் என்று நான் சொல்வேன்.

**தமிழ்நாட்டில் விவசாயிகளுக்கு தனி பட்ஜெட்!**

All the countries, to improve public governance and finance பெரும்பாலான நாடுகள் புதுமையான பட்ஜெட்டை தாக்கல் செய்கின்றன. பிரேசில் தனது நாட்டு



மக்கள் முனிசிபாலிட்டி எக்ஸ்பென்சசை தெரிவு செய்வதற்காக வாக்களிக்கும் உரிமையை அளிக்கிறது. அவ்வகையில் அடித்தட்டு மக்களின் பங்களிப்பை உறுதி செய்கின்றது. எங்கள் முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஒவ்வொரு முறை பட்ஜெட்டை தாக்கல் செய்யும்போதும் சிறு, குறு விவசாயிகளை, நடைபாதை வியாபாரிகளை அழைத்துப்பேசி, பட்ஜெட்டை முடிவு செய்ததை இங்கே நினைத்துப் பார்க்கிறேன். விவசாயிகளுக்கு என்று தனியாக ஒரு பட்ஜெட்டை எங்கள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தருகிறார். அவரை நன்றியோடு இங்கே நினைவு கூர்கிறேன்.

நியூசிலாந்துக்கு வாருங்கள். மக்கள் நல பட்ஜெட். நார்வேக்கு வந்தீர்கள் என்றால், சுற்றுச்சூழல் செயல்பாட்டு திறன் அடிப்படையிலான பட்ஜெட். நெதர்லாந்து என்ன செய்கிறது என்றால், அவுட்கம் பேஸ்டு பட்ஜெட். அதாவது, உங்களுடைய பொறுப்புக் கூறலை உறுதி செய்து, உங்கள் செயல்திறனுக்கு ஏற்ப நிதியை வழங்குகிறது. உரிமையோடு நிதியை கேட்டுப்பெற முடிகிறது.

**எது அற்பத்தனம்!**

சமீபத்திலே ஒன்றிய அமைச்சர், வரியை அதிகமாக தரும் எங்களுக்கு நிதி குறைவாக தரப்படுகிறது என்று தமிழ்நாடு சொல்வது அற்பத்தனமானது என்று சொல்லியிருக்கிறார். இது அற்பத்தனமானது என்றால், தமிழ்நாட்டுக்கு பிஎம்ஸ்ரீ திட்டத்தில் வரவேண்டிய ரூ.2152 கோடியை பீகாருக்கும், உத்தரபிரதேசத்துக்கும் அனுப்பியது அற்பத்தனமானது இல்லையா? அதை நாங்கள் அவரிடம் கேட்க மாட்டோமா? நினைத்துப் பாருங்கள் நீங்கள்.

எப்போது பார்த்தாலும் சரி பீகாருக்கு கொடுங்கள். எங்களுக்கு அதில் மாற்றுக்கருத்து இல்லை. பீகாரில் வெள்ளம் ஏற்பட்டபோது 2008ம் ஆண்டு முதலமைச்சராக இருந்த எங்கள் தலைவர் கலைஞர் பீகாருக்கு 10 கோடி ரூபாய் வெள்ளநிவாரணம் கொடுத்தார். அந்த மாநிலமும் கலைஞர் இறந்தபோது துக்கம் அனுசரித்தது. ஆனால் சென்ற இடைக்கால பட்ஜெட்டிலே 60 ஆயிரம் கோடி வழங்கிவிட்டு, இப்போது மக்வானா வாரியம், ஐஐடி பாட்னா, மேற்கு கோஷி கெனால் திட்டம் என்று ஏகப்பட்ட திட்டங்கள்.

**தமிழுக்கு நிதி ஒதுக்கீடு குறைவு!**

அதைப்போல எங்களுடைய டெல்டா விவசாயிகள் முன்னேற வேண்டாமா?

மஹாராஷ்ட்டிரா மாநிலத்துக்கு 39 ஆயிரம் கோடி. ஆனால் எங்களுக்கு என்று ஒதுக்கீட்டில் எந்த பெரிய திட்டங்களும் இல்லை. எங்கள் முதலமைச்சர், தமிழின் தொன்மையை இரும்பின் தொன்மை கொண்டு உலகிற்கு அறிவித்து இருக்கிறார். ஆனால் தமிழுக்கான நிதி ஒதுக்கீட்டை குறைக்கிறீர்கள். கடந்த பட்ஜெட்டில் சமஸ்கிருதத்திற்கு 1000 கோடிக்கு மேல், தமிழுக்கு ரூ.22 கோடி. இப்போது இந்திக்கு ரூ.1000 கோடிக்கு மேல் ஒதுக்கிவிட்டு, எங்களுக்கு ரூ.84 கோடிதான் ஒதுக்கி இருக்கிறீர்கள்.

உங்கஅளுடைய பொருளாதார ஆய்வை எடுத்துக் கொள்ளுங்கள் (Economic Survey) தமிழ்நாட்டின் ஜிடிபி தேசிய சராசரியை விட 56 சதவிகிதம் அதிகம். தமிழ்நாடு 9 சதவீதம் உள்நாட்டு உற்பத்திக்கு பங்களிக்கின்றது. கல்வி, மருத்துவம், விளையாட்டு என அனைத்து துறைகளிலும் நிதி ஆயோக் தரவரிசைப் பட்டியலில் தமிழ்நாடு முதல் 3 இடத்தில் உள்ளது. இதனை வஞ்சித்தால் எப்படி?

உங்களுடைய பொருளாதார ஆய்வின் முன்னுரையில், ஸ்பாட்டன்ஸ் (Spartans) என்று சொல்லப்படுகின்ற வீரர்களின் ஒரு மேற்கோளை அரசு பதிந்திருக்கிறது The more You sweat on Peace, the less you bleed in Battle. உங்களுக்கு நான் அதனையே மாற்றிச் சொல்கிறேன், The more You sweat on Inclusive Politics, the less you bleed in Economic Progress

அவையின் நடுவிலே செங்கோலை வைத்து இருக்கிறீர்கள்.

The Place does not make a Man,

Neither Sceptre, the King

Greatness should come from within

இடம் ஒரு மனிதனை உருவாக்குவதில்லை,

மன்னனை செங்கோல் உருவாக்குவதில்லை. அரும்பெரும் நற்குணங்கள் உள்ளிருந்து வரவேண்டும். மக்களாட்சி மாண்புகளோடு, கூட்டாட்சி தத்துவத்தை உணர்ந்துகொண்டு, பிளவுவாத அரசியலை விடுத்து, மதவாத அரசியல் எனும் முள்ளெடுங்கள்.

நாடு வளர்ச்சி பெறும், மக்கள் நலம்பெறுவர்...

இவ்வாறு தமிழச்சி தங்கபாண்டியன் பேசினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வேலூர் பி. சண்முகம்

### பிப்ரவரி 14 (2006)



**வேலூர் மாவட்டக் கழகச் செயலாளராக பொறுப்பு வகித்தவர். 1996ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வேலூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்.**

**தமது சொந்த ஊரான அகரம்சேரியில் ஊராட்சி மன்றத் தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டு பணியாற்றியவர்.**

**கழகம் நடத்திய பல்வேறு அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**"அடக்குமுறைகள் ஏற்றவர் – கழகம் காத்தவர் – கண்ணியமானவர் – கட்டுப்பாடு மிக்கவர் – குறிப்பாக கூறவேண்டுமாயின் மென்மையானவர் – மேன்மையானவர்" என தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**